[1979 நவம்பர் 8

நவீன அரிசி ஆலை கிடங்கு தொழிலாளர்கள்.

*வினா எண் 146—திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் உள்ள M.R.M. மில்கள் கிடங்குகள் எத்தனை? அதில் சுமைதூக்கும் தொழிலாளர்கள் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) இவர்களை நிரந்தர ஊழியராக்கவும் அடிப்படை சம்பளம் நிர்ணயிக்கவும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: (அ) தமிழ்நாடு முழுவதும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கை 13. அவைகளைச் சார்ந்த கிடங்குகள் 44 உள்ளன. கிடங்குகளில் வேலை செய்யும் சுமைத்தூக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 425.

(ஆ) நவீன அரிசி ஆலைகளில் வேலை செய்யும் சுமை தூக்கும் தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் காண்டிராக்ட் முறையின் கீழ் வேலை செய்வதால் அவர்களை நிரந்தரமாக்குவதற்கோ அல்லது அவர்களுக்கு அடிப்படை சம்பளம் வழங்குவதற்கோ இடமில்லை. மற்றொரு பிரிவினர் நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நேரடியாக நியமிக்கப்பட்டவர்களாவார்கள். இவர்களுக்கு அடிப்படை சம்பளம் வழங்குவதாக நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. கூ. ச. முருகேசன்: தலைவரவர்களே, அந்த கான்ட்ராக்ட் முறையிலே வேலை செய்யும் தொழிலாளர்கள் 5 ஆண்டு அல்லது 10 ஆண்டு என்று இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுத்து, அவர்கள் எல்லோரையும் நிரந்தர ஊழியர்களாக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: தலைவரவர்களே, கான்ட்ராக்ட் எடுப்பவர்கள், அவர்களுக்கு கீழே ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழிலாளர்களை வைத்து வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுப்பது என்பது இயலாது, காரணம் அது சட்டத்தின் அடிப்படையிலே கூட செய்யமுடியாமல் உள்ளது. ஏனென்றால், மொத்தமாக ஒரு குறிப்பிட்ட வேலையை செய்வதற்கு இவ்வளவு கூலி என்று நிர்ணயித்து, கான்ட்ராக்டர்களிடம் விடப்படுகிறது. அப்பேர்ப்பட்ட முறையில் தலையிட்டு, எந்தவிதமான மாற்றமும் செய்ய முடியாது.

திரு. கூ. ச. முருகேசன்: தலைவரவர்களே, அந்த கூலித் தொழிலாளர்களை நிரந்தரமாக அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1979 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, தொடர்ந்து வேலைவாய்ப்பு எப்போதுமே இருக்கக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தால் அவர்களை நிரந்தரமாக்குவது முடியாத காரியம்.

திரு. ஜே.ஜேம்ஸ்: தலைவரவர்களே, அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் நேரடியாகவும் ஒரு பகுதியினர் கான்ட்ராக்ட் முறையின்படியும் வேலை செய்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இரண்டு பிரிவிலும் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பெறுகின்ற சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறதா? வித்தியாசம் இருந்தால், அப்படிப்பட்ட வித்தியாசம் இல்லாமல் ஒன்றுபோல் சம்பளம் பெறும் ஏற்பாட்டை கான்ட்ராக்ட்டிலே ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இந்த முறையிலே இருக்கின்ற வேறுபாட்டை புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். நிரந்தரமாக வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு நிரந்தரமாக வேலை இருக்கிறது. அவர்களுடைய ஊதியம் துறையிலே நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால் ஒப்பந்தப் புள்ளியின் கீழ் வேலை கொடுத்ததால் அவர்களுக்கு எப்போதும் வேலை கொடுக்கும் சாத்தியம் இல்லை. மேலும் எந்த அடிப்படையிலே ஒப்பந்தப்புள்ளிக்காரர்கள் வேலைக்கு ஆட்களை நியமிக்கிறார்களோ அந்த அடிப்படையிலேதான் அவர்களிடமிருந்து ஊதியம் பெறுகிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு கான்ட்ராக்டர்களால் ஊதியம் கொடுக்கப் படுகிறது; அவர்களுக்கு ஊதியம் நேரடியாகக் கிடைப்பதில்லை. காண்ட்ராக்டர்கள் ஒரு டன்னுக்கு 17 ரூபாய் என்று வேலையை எடுத்துக்கொண்டால், தொழிலாளர்களுக்கு 7 ரூபாய்தான் கொடுக்கிறார்கள்; 10 ரூபாயை இடையிலே இருக்கின்ற கான்ட்ராக்டர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி இல்லாமல் அந்த 17 ரூபாயும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கே நேரடியாக கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா? இப்போது இடையிலே இருக்கின்ற கான்ட்ராக்டர்கள் 10 ரூபாய் லாபம் சம்பாதிக்கின்றார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, அந்த முறையைக் கையாள்வதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன ஒப்பந்தப் புள்ளிக்காரர்களிடம் நேரடியாக வேலைக்கு இவ்வளவு என்று ஒப்படைக்கும்போது அவர்கள் அவர்களுக்கு கீழே ஆட்களை வைத்து வேலையை செய்து முடித்துவிட்டு, அவர்கள் பேசியபடி ஊதியத்தை பகிர்ந்து கொடுக்கிறார்கள். அதில் தவறு

இருக்கலாம். அதை எப்படி திருத்துவது என்று வேண்டுமானால் இந்தத் துறை பரிசீலிக்கலாம். ஆனால் எல்லோரையும் நேரடியாக வேலைக்கு அமர்த்துவதில் அல்லது நேரடியாக சம்பளம் வழங்குவதில் பல்வேறு சிக்கல் இருப்பதால் இப்போது இருக்கின்ற இந்த முறையை இப்போதைக்கு நாம் கையாள வேண்டியதிருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் ஒப்பந்தம் என்ற அடிப்படையிலே நியமிக்கப்படுவதால், இடைத்தரகர்கள் பணத்தை சுரண்டிக்கொண்டு போகிறார்கள். ஆகவே, உழைக்கின்றவர்கள் நியாயமான ஊதியம் பெறும் வகையில் நேரடியாக நுகர்பொருள் வாணிப கழகமே வேலை வாய்ப்பை உருவாக்கி, ஆட்களை நியமிக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. க. உராெ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருந்தபடி நுகர்பொருள் வாணிபக் கழகமே நேரிடையாக இப்பேர்ப்பட்ட தொழிலாளர்களை நியமிப்பது என்பது இயலாத காரியம். இப்பேர்ப்பட்டவர்களுக்கு நிரந்தரமாக வேலைகள் இருப்பதும் இல்லை. இப்பேர்ப்பட்டவர்கள் நிரந்தரமாக வேலை செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதும் நியாயம் இல்லை. வேண்டுமென்றால் அவர்களே தங்களுக்குள் சங்கம் ஒன்றை வைத்துக் கொள்ளும் முறையிலே ஒப்பந்தப்புள்ளிகள் கொண்டு வந்தால், இந்தத் துறை அவர்களுக்கு முன் உரிமை கொடுப்பதற்கு ஆலோசித்து முடிவு எடுக்கலாம்.

காரைக்குறிச்சியில் பின்தங்கிய மாணவர் விடுதி.

*வினா எண். 147—திரு வ. சின்னசாமி: மாண்புமிகு உணவு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், காரைக்குறிச்சி, மேல்நிலைப் பள்ளிக்கு, பின்தங்கிய மாணவர் இல்லம் ஒன்று அமைக்க அரசிற்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு க. உராெ. எட்மண்ட்:

(அ) மற்றும் (ஆ) 1979-80ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டம், நாமக்கல் தாலுக்கா விலுள்ள, காரைக்குறிச்சி புதூரில் பிற்பட்ட மாணவர்களுக்காக ஒரு மாணவர் இல்லம் திறக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.